# ★ விமானப்படைக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கும்!

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 21 இதழ் 89
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4 - 5 - 1995

## 'மிக்' விமானம் வாங்க முடிவு

(கொழும்பு)

வடகக்கு-கிழக்கில் யுத்தத்தில் விமானத் தாக்குதலை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு ஆலோசகர்களின் உதவியை இலங்கை நாட இருப்பதாக விமானப்படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' சிங்கள சேவை தெரிவித்தது

'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்ததாவது:

அதி நவீன தொலைத் தொடர்பு சாதனங்களைப் பெறுவதோடு தாக்குதல் நடவடிக்கைக்காக 'மிக்' ரக விமானங்களை கொள்முதல் செய்வதற்கும் நடவடிக்கை

(6-ம் பக்கம் பார்க்க)

## இரு பௌத்த பிக்குகள் ராணுவத்தில் இணைந்தனர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இரராணுவத்துடன் இணைந்து போரிட இரு பௌதத பிக்குகள் இலங்கை இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.

இவ்வாறு பௌத்த பிக்குகள் இராணுவத்தில் சேர்வது அந்த மதத்தின் மார்க்கத்திற்கு மாறான செயல் என செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## ★ ரோந்துப்படையணிமீது நேற்று

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

# நான்கு இராணுவம் உயிரிழப்பு

## காயங்களுடன் பலர் தப்பியோட்டம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பகுதியில் ரோந்துசென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் உயிரிழந்தனர். பலர் பலத்த காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

இத்தாக்குதல்பற்றி மேலும் தெரிய வருவதாவது: நேற்றுக்காலை 9-30 மணியளவில் மட்டக்களப்பு- வாழைச்சேனை நான்காம் முச்சந்தி இராணுவ முகாமிலிருந்து பெண்டுகள் சேனை நோக்கி நூற்றுக்குமேற்பட்ட இராணுவத்தினர் முன்னேறி வந்தனர். இவ் இராணுவ அணி மீது, பெண்டுகள் சேனையில் வைத்து விடுதலை புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லபபட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். இவர்கள் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட நான்கு இராணுவத்தினரின் உடல்களையும் கைப்பற்

(6ம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்ட உணவுக் கப்பல்கள் பொருட்களை இறக்கும்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடந்த உயர்மட்டக் கூட்டமொன்றை தொடர்ந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், மண்ணெண்ணையையும் ஏற்றிச்சென்ற இரு கப்பல்களும் இப்பொருட்களை இறக்க அனுமதிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறை வந்த இக்கப்பல்கள் இவ்வாரத்தொடக்கத்தில் இத்துறைமுகம் வராமல் காங்கேசன்துறையில் படையினரால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டன.

இரு அவ்ரோ விமானங்கள் யாழ். குடாவில் சுட்டு வீழ்த்தப்பட்டதன் எதிரொலியாக இவை தடுத்துவைக்கப்பட்டிருந்தன.

இப்போது கொழும்பு மேலிட உத்தரவை அடுத்து பருத்தித்துறை துறைமுகத்தில் இக்கப்பல்கள் வந்து பொருட்களை இறக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. -கே-சி

## சந்திரிகா அவசரமாக நாடு திரும்பினர்

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டுக்கு இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி திருமதி சந்திரிகா நேற்றுக்காலை அவசர அவசரமாக கொழும்பு திரும்பினர்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பமான 8வது சார்ச் உச்சி மாநாட்டின் ஆரம்பநாள் நிகழ்வுகளில் மட்டும் சம்பிரதாயபூர்வமாகக் கலந்து விட்டு நேற்றுக்காலை ஜனாதிபதி சந்திரிகா கொழும்பு

(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உதவி கேட்டால் இந்தியா அதனை பரிசீலிக்கும்

(புதுடில்லி)

இலங்கை அரசு இந்தியாவிடம் இராணுவ உதவி பெறுவது பற்றி கலந்தாலோசிக்கவில்லை. அப்படி இராணுவ உதவி கேட்டால் இந்திய அரசாங்கம் அது பற்றி பரிசீலனை செய்யக் கூடும் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' சிங்கள சேவை தெரிவிததது.

இதை உறுதிப்படுத்துவது போன்று இலங்கை வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கை அரசு

(2-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடற்படைக்கு பதிலாக இராணுவத்தினர் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

அரசாங்கம் கொழும்பில் தீவிர பாதுகாப்பை மேற்கொள்ளும் வகையில் புதுப் புது மாற்றங்களை அறிவித்திருப்பதாக பி. பி.சி சிங்கள சேவையில் திரு. எல்மோ பெர்ணண்டோ தெரிவித்தார்.

இதுவரைகாலமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஆகியவற்றின் பாதுகாப்பை மேற்கொண்ட கடற்படையினரை அங்கிருந்து அகற்றிவிட்டு இந்த இடங்களுக்கு இராணுவத்தை அரசு நிறுத்தியுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மூவர் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியாவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட மூவரின் சடலங்கள் வீதிகளில் போடப்பட்டுள்ளன.

ஒரே இரவில் இந்த மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களின் சடலங்கள் வீதிகளில் போடப்பட்டிருந்தன. படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இச்சடலங்கள் கண்களும், கைகளும்கட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று ஹர்த்தால் ஒரு லட்சம்பேர் தமிழகத்தில் கைது!

(சென்னை)

ஆளும் அ. தி. மு. க. அரசுக்கு எதிராக இன்று தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் நடாத்தவிருக்கும் ஹர்த்தாலை அடுத்து ஒரு லட்சம் பேர் கைதாகி இருப்பதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

இன்றைய ஹர்த்தாலின் போது ஆளும் கட்சியினர் வன்முறையில் ஈடுபட்டு குழப்பத்தை ஏற்படுத்தி எதிர்க்கட்சிகள்மீது குற்றம் சுமத்த திட்டமிட்டிருப்பதாக அவர் மேலும் குறை கூறியுள்ளார்.

என்றுமில்லாத வகையில்

(6-ம் பக்கம்பார்க்க)

## சந்திரிகாவின் பாதுகாவலர்க்கு இந்தியப் படையினர் பயிற்சி!

(புதுடில்லி)

இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை தொடர்ந்து இந்திய தேசிய பாதுகாப்பு படையினர் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு விஷேட பயிற்சி வழங்கியுள்ளனர்.

இன்னும் கூடுதலான காவலர்களுக்கு பயிற்சி வழங்கும்படி இலங்கை அரசு விடுத்திருக்கும் மற்றொரு வேண்டுகோள் குறித்து இந்திய அரசு பரிசீலித்து வருகிறது.

இது பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த ஒரு தனிப்பட்ட உதாரணமா அல்லது இரு நாடு

(2ம் பக்கம்: பார்க்க)

# யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் 85 வீத மாணவர் நோயால் பாதிப்பு

## ஆய்விலிருந்து தகவல்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் யாழ் சுகாதார அத்தியட்சகர் பிரிவினர் மேற்கொண்ட ஆய்வுகளில் சுமார் 85சதவீதமானவர்கள் நோய்த் தாக்கத்தினுல் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் யாழ். மாநகர சபை பிரிவுக்குட்பட்ட சில பாடசாலைகளின் முதலாம் ஆண்டு, நான்காம் ஆண்டு, ஏழாம் ஆண்டு மாணவ, மாணவிகளிடம் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பற்சூத்தை நோயினுல் 47 சதவீத மாணவ, மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு அடிப்படைக் காரணம் பற்கள் ஒழுங்காகப் பேணப்படாமையினுல்எனவும் தெரிவிக்கப்படுகின்றது. உலர் கண் நோயினுல் சுமார் 24 சதவீதமானவர்கள் பாதிப்படைந்தனர்.

வயதிற்கு ஏற்ற நிறையும், உயரமும் அற்ற நிலையில் 4.39 சதவீத மாணவர்கள் காணப்படுகின்றனர். சுவாச தொகுதி நோயினுல் 3 79 மாணவர்களும் கண்ணில் வெள்ளை படை பரவுதல் நோயினுல் 3 சதவீதமானவர்கள் கண்பார்வை குறைபாட்டினுல் பாதிப்படைந்துள்ளனர்.

குருகிச் சோகை நோயினுல் 2 சதவீதமானவர்களும் பேச்சுக் குறைபாட்டினுல் 0.28 சதவீதமானவர்களும் பாதிப்படைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. -154-ரி

### யுவதிகளுக்கு தையல் பயிற்சி

(கொழும்புத்துறை)

தென் மராட்சி பிரதேச சபை கிராமிய அபிவிருத்தி பிரிவினரால் கொடிகாமம் மத்தியில் படித்து விட்டு வேலையில்லாதிருக்கும் யுவதிகளுக்கான புதிய தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாக அப் பகுதி கிராமிய அபிவிருத்தி அலுவலர் தெரிவித்துள்ளார்

இப் பயிற்சி நிலையத்திற்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக இவர் கூறியுள்ளார். 154

### அலங்கார உற்சவம்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 1ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தினமும் விசேட அபிஷேக ஆராதனை பூசைகள் ஆகியன நடைபெற்றுவருகின்றன -59

### இன்று

(கொழும்புத்துறை)

யாழ். புதுவீதி கொய்யாத் தோட்டம் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் இன்று 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு விசேட அபிசேகமும், பூசை வழிபாடும்' நண்பகல் 12-00 மணிக்கு அன்னதானமும் நடைபெறும்

மாலை 6-00 மணிக்கு வைரவர்சாந்தி இடம்பெறும். 154


பட்டப்பின் டிப்ளோமா

பொது நிர்வாகம் 2ம் அரையாண்டிற்கான

**விரிவுரைகள்-1995**

மேற்படி படிப்பிற்கான விரிவுரைகள் 10-05-95 அன்று ஆரம்பமாகவுள்ளன.

பதிவாளர்.

(எ-4908)


## மாட்டுவண்டி சவாரிபோட்டி பரிசு பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடாத்திய உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகளின் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி முடிவுகள் வருமாறு:

ஏ பிரிவு: 1ம் இடம்-சோ. மதுசன், சண்டிலிப்பாய். 2ம் இடம்-க. கஜேந்திரன், பன்னுலை. 3ம் இடம்- இ. சிவானந்தன் புன்னுலைக்கட்டுவன். 4ம் இடம்-க. காந்தருபன், பன்னுலை.

பி-பிரிவு: 1ம் இடம்- அ. நவரத்தினராசா, கோண்டாவில். 2ம் இடம்-சோ. மகாலிங்கம், வட்டுக்கோட்டை. 3ம் இடம்- இ. திருநாவுக்கரசு, பண்டத்தரிப்பு. 4ம் இடம்- சு. சுகந்தன், அந்தணத்திடல்.

சீ-பிரிவு: 1ம் இடம்- வி. விஜயகுமார், அளவெட்டி. 2ம் இடம்- வ. சின்னத்தம்பி, வரணி. 3ம் இடம்- செ. சிவசுரன், எழுது மட்டு வாள் தெற்கு.

கைக்கொடி சவாரி: 1ம் இடம்- ஐ. சிவபாலன், கரவெட்டி 2ம் இடம்-க. வைத்திலிங்கம், கச்சாய், கொடிகாமம். (ரி)

## கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கமக்காரர் அறிமுக அட்டைகள் தொடர்ந்தும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இவ் விநியோகத்தை துரிதப்படுத்துவதுடன் இல்வாண்டு சிறுபோக காலபோக செய்கைக்கான அனைத்து உள்ளீட்டுப் பொருட்களையும் இவ் அட்டையினூடாக வழங்குவதோடு விவசாயச் செய்கைக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக இவ்வாண்டு இறுதிக்குள் அட்டை விநியோகம் பூர்த்தி செய்யப்படும்.

ஆகவே மேற்படி விடயத்தைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு விவசாயிகளும் தத்தமது பகுதியிலுள்ள கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர் ஊடாக விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதில் உள்ள சுய விபரம், பயிர் செய்யும் காணியின் விபரம் ஆகியவற்றை முழுமையாக பூர்த்தி செய்வதோடு, பயிர் செய்யும் காணியின் வரை படத்தையும், கிராமசேவகர் உறுதிப்படுத்திய இரண்டு புகைப் படங்களையும் இத்துடன் இணைத்துப் பெற்றுக்கொள்ளவும்

இதுவரை காலமும் கமக்காரர் அறிமுக அட்டைக்கென விண்ணப்பித்தவர்களதும் ஏற்கனவே கமக்காரர் அறிமுக அட்டைக்கென கிராமிய உற்பத்திக் குழுவினூடாக விண்ணப்பித்து இதுவரை அட்டை பெற்றுக் கொள்ளாதவர்களும் உடன் அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறும், அட்டைகள் பெற்றுக்கொள்வதில் பிரச்னைகள் இருப்பின் அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளர் அல்லது பதிவாளருடனே தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

### திருடப்பட்ட மரங்கள்மீட்பு இருவர் கைது

(ஆனைப்பந்தி]

யாழ். கோட்டைப்பகுதியில் அனமந்துள்ள கொட்டிலில் இருந்து மரங்களை திருடியவர் காவல்துறையினரால கைது செய்யப்பட்டனர்.

திருடப்பட்டு இப்பகுதியில் உள்ள வீடொன்றுல மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 3500 ரூபா பெறுமதியான மரங்கள் மீட்கப்பட்டதுடன் இருவர் கைதுசெய்யப்பட்டதாக யாழ். காவல்நிலையத்தினர் தெரிவித்தனர்.

]101)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05–04**

வியாழன் இரவு

08-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்தமருத்துவ குறிப்புகள்
08 20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''ஒன்றுபட்டுச் செயற்படுவோம்'' குறுநாடகம்
08-30 செய்திகள்
08-40 மொழியும் வாழ்வும்
08-50 எங்களின் தேசம்

**1995–05–05**

வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05-04**

வியாழன் மாலை

05-01 சிந்தனைச்சிதறல்
05-02 எழுச்சிக்கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்
06-00 சிந்தனைக்குச் சிலவினுடிகள்
06-02 பொன்விளையும் பூமி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 கேள்வி - பதில் - விளையாட்டுத் தொடர் பானவை
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### பத்திமா அன்னை திருவிழா

(அரியாலை)

புனித பத்திமா அன்னையின் திருவிழா எதிர்வரும் 13ந் திகதி சனிக்கிழமை பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (59)

### ஐக்கிய வி. க. சாம்பியன்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழாவிலே பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் சாம்பியனுகத் தெரிவாகிப் பரிசில்களை தட்டிக்கொண்டது. -52

### புதிய டாக்டர்

(நெல்லியடி)

பிரெஞ்சுவைத்தியக் குழுவில், மந்திகை மருத்துவ மனையில் பணிபுரிய புதிய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்திரோ' கடந்த மாதம் 29ம் திகதி வந்து சேர்ந்தார் இவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர். 160


# விரைவில் வெளிவருகின்றது!

# 'ஈழநாடு' வாரமலர்

கீழ்க்காணும் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன:

★ ஈழநாடு வாரமலருக்கு தரமான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள்.

★ சிறுவர் அரங்கு மாதர் அரங்குக்கான படைப்புக்கள்.

★ பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள்

★ போராட்ட காலத்தில் ஏற்பட்ட உண்மைச் சம்பவங்கள்.

★ பல்வேறு வகையான தரமான துணுக்குகள்;

அனுப்பவேண்டிய முகவரி:

ஈழநாடு (வாரமலர்)

த. பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

(ஏ 4904)


### சந்திரிக வின்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

களுக்குமிடையே பாதுகாப்பு துறை உறவு ஏற்படும் ஓர் புதிய சகாப்தத்தின் துவக்கமா அதிலும் முக்கியமாக புலிகள் இலங்கை படையினர் மீது புதியதாக்குதல்களைதொடங்கியிருக்கும் இவ்வேளை ஏற்பட்டுள்ள புதிய நிலைமையா என்பது தெளிவாகவில்லை என பி. பி ஸி தெரிவித்தது

மற்றொரு நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தேசிய பாதுகாப்பு காவலர் பயிற்சி அளிப்பது இதுவே முதல்தடவையாகும் தனது அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி குறித்து இலங்கை திருப்தி தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மைக் காலமாக இடம்பெறும் அரசியல் கொலைகளை தொடர்ந்து இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புதிய சாத்தியக் கூறுகள் தோன்றியிருப்பதாக புதுடில்லியிலுள்ள பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

ஆனுல் அவ்வாறுன எந்த ஒத்துழைப்பிலும் 1987ல் நடந்தது போன்று அதாவது புலிகளை எதிர்த்துப்போராடா இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பியது போன்ற செயல் இம்முறை நிச்சயமாக இடம்பெறுது மாருக இராணுவ உதவியும் பயிற்சி மற்றும் இராணுவ தளபாட உதவி வழங்குவது என்ற நிலை ஏற்படலாம் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது. சி

### இராணுவ உதவி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியாவிடம் இராணுவ உதவி எதுவும் கோரவில்லை என்றும் குறிப்பிட்டார.

இதேவேளை ஜனதிபதி சந்திரிகாவும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் புதுடில்லியில் தனிப்பட்ட முறையில் 25 நிமிட நேரம் கலந்தாலோசனை செய்ததாகவும், இருவருக்குமிடையில் நிகழ்ந்த பேச்சுக்கள் பற்றி எதுவித தகவலும் வெளியிடப்படவில்லை என்றும் 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது.

இந்தியாவிடம் இலங்கை இராணுவ உதவியை கேட்டுள்ளதாகவும், கேட்கவில்லை என்றும் இருவேறு செய்திகள் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. -ம-சி

### மணிவாக்கு

உலகில் வெற்றிபெற வேண்டுமானுல் ஏற்கனவே வெற்றிபெற்றுவிட்ட மாதிரி நீங்கள் தோற்றம் தர வேண்டும்.

- நெப்போலியன்.

## நமது நோக்கு

### தந்தையார் நினைவு

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியின் முதலாவது மேதின விழாச் செய்தியில் ஜனதிபதி சந்திரிகா அம்மையார் தமது தந்தையாரை நினைவுபடுத்தியுள்ளார்.

அதாவது - 1956ல் பண்டாரநாயகா ஆட்சிக்கு வந்தபோது தொழிலாளர் தினமான மே முதல் நாளைப் பொதுவிடுமுறை தினமாக்கியதை நினைவுபடுத்தியுள்ளார்.

அதே பண்டாரநாயகா தான் சில மாதங்களுக்குப் பின் பல தொடர் வேலைநிறுத்தங்களைச் சந்தித்தார் என்பதை வேதனையோடு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

ஐ, தே. க. ஆட்சியில் ஒரு சாதாரண அமைச்சராக இருந்த பண்டாரநாயகா 1952ல் தனிக் கட்சி ஆரம்பித்து அவ்வாண்டு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராணர்.

1956ல் அவர் எப்படி ஆட்சிக்கு வந்தார் என்பதையும் நினைவுபடுத்திப் பார்ப்பது நல்லதல்லவா?

தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணித்தியாலங்களுக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவேன் என்ற அரசியல் முழக்கத்தை முதன்மைப்படுத்திஞர்.

இதனுல் எழுந்த புதிய இனவாத அலை அவரை அரியணையில் அமர்த்த உதவிற்று என்பதை நாடு மறந்துவிடாது என நம்புகிறோம்.

அதுமாத்திரமல்ல- மொழி உரிமைக்கான கிளர்ச்சியை அவர் எவ்வாறு கையாண்டார்?

1956, 1958 இனக்கலவரங்கள் எவ்வாறு நடந்தன? தமிழ் மக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டார்கள்?

இன்று- தெற்காசியப் பிராந்தியத்தில் பயங்கரவாதப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கலாம் என ஆலோசனை நடத்துபவர்கள், பழைய அரசியற் குறிப்புகளையும் கோவைகளையும் ஆலோசனை மேசையில் எடுத்துவைப்பது அவசியம்.

அரச பயங்கரவாதத்தால் தமிழர்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை எவரும் எளிதாக மறந்துவிட முடியாது,

அரச பயங்கரவாதத்தாற் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகமே இன்று நீதிக்காகப் போராடி வருகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்!

# தென்பகுதியில் தீவிரமாகபடைகளுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்கிறது

## இளம் பிக்குகளும் விண்ணப்பம்

(கொழும்பு)

படையினரின் தொகையை அதிகரிக்கும் நோக்குடன் படைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் தெற்கில் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நாடெங்கிலும் அமைக்கப்பட்டுள்ள 15 ஆட்களைச் சேர்க்கும் நிலையங்கள் மூலமாக அடுத்து வரும் 5 நாட்களுக்குள் புதிதாக பல இளைஞர்களைச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

மூன்றரை மாதங்கள் நீடித்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததைத் தொடர்ந்து படைகளுக்கு புதிதாக ஆட்களைத் திரட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பி. பி. ஸி. முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவிக்கையில், மீண்டும் தொடங்கிய சண்டையைக் கண்டு தயக்கம் கொள்ளாமல் புதிதாக படையில் சேர இளைஞர்கள் ஆர்வமுடன் வருவதாகத் தெரிய வருகிறது.

கொழும்பில் மட்டும் 300க்கும் மேற்பட்ட இளைஞர்கள் படையில் சேர முன்வந்தார்களாம்.

நாட்டின் இதர பாகங்களிலும் இதைவிட அதிகமாக சேருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விளைஞர்களில் சிலர் வேலை வாய்ப்பு ஒன்று கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சேர்ந்திருந்தாலும் இவர்களில் சிலர் உடைத் தொழிற்சாலைகளில் வேலை புரிபவர்களும், சிலர் தனியார் பாதுபாதுகாப்பு துறையில் வேலை செய்பவர்களும் சில இளைய புத்த பிக்குகள்கூட படையில சேர விண்ணப்பித்துள்ளனராம்.

புதிதாக படையில் சேர்பவர்களுக்கு நான்கு மாத பயிற்சிகள் வழங்கப்பட்டு உடன் யுத்த முனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், படைகளைவிட்டு ஓடியவர்களின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டே அவசர அவசரமாக படைகளுக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையும் 25,000த்திற்கும் மேற்பட்டோர் படைகளிலிருந்து தப்பியோடிவிட்டதாகவும் தப்பியோடியவர்களில் அதிகமானேர் கொள்ளை மற்றும் பயங்கரவாதக் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரி

## பலதும் பத்தும்

### மருந்தும் நஞ்சே!

''அளவிற்கு மீறினுல் அமுதமும நஞ்சே!'' என்பது பழமொழி. தற்போது அளவிற்கு மீறினுல் மருந்தும் நஞ்சே!'' என்ற புதுமொழி வந்துவிட்டது. ஏனெனில்... மருத்துவர் ஆலோசனைப்படி குறித்த காலத்தில், குறிப்பிட்ட அளவு மாத்திரைகளையே எடுக்கவேண்டும். சிலர்... தாமே தமது நோய்க்கு மருத்துவராகி கண்டபடி குளிகைகளை எடுப்பது ஆபத்தானது.

கீழைத்தேய மருந்துகள் பற்றியும் அவதானம் தேவை. இந்தியாவிலுள்ள ஜதவ்பூர் பல்கலைக்கழக டாக்டர் சட்டோபாத்தியாயா ஆயுள்வேத மருந்துகளின் பக்கவிளைவுகள்பற்றி ஆராய்ந்து வருகிறூர்.

'அருந்தியது அற்றது போற்றி உணின், மருந்தென வேண்டாம்' என்கிறூர் திருவள்ளுவர். குறள் வழி நடந்தால் மருந்தே தேவையில்லையல்லவா?

— மயூரன்

## இராசி பலன்

04-05-1995

வியாழக்கிழமை

(தமிழுக்கு சித்திரை—21)

சதுர்த்தி காலை 6-49 வரை திருவாதிரை முழுவதும் மரண யோகம், இராகுகாலம் மாலை 12-06 முதல் 2-56 வரை, சுபவேளை காலை 7-26 முதல் 8,56 வரை

மேடம்; தொழில் ஊக்கம், குடும்பசுகம், பயண நன்மை

இடபம்: மனககுமுறல், பந்துக்கள் பகை. அலைச்சல்

மிதுனம்:- புதிய முயற்சி, பணப்புழக்கம், சுபச்செய்தி

கடகம்: விரோதிகள் துன்பம், மனச்சுமை வேதனை

சிங்கம்: தொழில் லாபம், மனித நேயம், காரியசித்தி,

கன்னி: இனசன மகிழ்ச்சி, சமயோசிதசெயல், தியானம்

துலாம்: உடல்நலக்குறைவு, குடும்பசச்சரவு, வீண்விரயம்.

விருச்சிகம்: மறைமுக தொல்லை, நிம்மதிக்குறைவு, அகால உணவு

தனுசு: நண்பர் அறிவுரை, தொழில் சிறப்பு, இனிய உறவு

மகரம்; முயற்சி வெற்றி, அநாவசிய சந்தோஸம், மன வெறுப்பு

கும்பம்; துஷ்டர் சகவாசம். கடன்பிணக்கு. ஊக்கக்குறைவு

மீனம்: ஒழுக்க குறைவு, தொழில்கேடு, வீண்தொல்லை

- ஜோஸ்யர்

# திருமலை நகரில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிப்பு

(திருமலை)

திருமலை நகர்ப்பகுதியில் பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலை துறைமுகப் பகுதியில் கடந்த 19ம் திகதி கடற்புலிகள் நடத்திய கப்பல்கள் தகர்ப்பின் எதிரொலியாகவே இப் பகுதியில் பெரும்தொகையான படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலை நகர் திரும்பிய இடமெல்லாம் இராணுவத்தினரின் தொப்பிகளே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலை நகரில் இராணுவம் குவிக்கப்பட்டதையடுத்து வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவுச்சாலைகள் யாவும் மூடப்பட்டு சன நடமாட்டம் எதுவுமின்றி நகர்ப்பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது,

நகர்ப்பகுதியிலுள்ள ஆலய விழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளும் இதனுல் ரத்துச் செய்யப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ரி

# அரசு யுத்தத்தைத் தொடர்ந்தால் மீண்டும் பலத்த இழப்பு ஏற்படும்

## 'ராவய' எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தற்போது பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அரச படைகள் மீண்டும் மோசமான இழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை நடாத்தி அதில் தோல்வியுற்ருல் தற்போது அரசு சந்தித்துள்ள இழப்புகளைவிட மோசமான இழப்புகளைச் சந்திக்கும் எனவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது விடுதலைப் புலிகளிடம் சந்தித்துள்ள கௌரவ இழப்பை ஈடுசெய்ய அரசு பாரிய போர் நடவடிக்கைக்கு திட்டமிட்டு வருகிறது. பாரிய யுத்தத்திற்காக நவீன ரக ஆயுதம் மற்றும் போர் விமானக் கொள்வனவுகளில் அரசு மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன் படையிருக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகளையும் அவசர அவசரமாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அரசின் இந்நடவடிக்கையானது மீண்டும் மீண்டும் படையினரின் இழப்புக்களையே அதிகரிக்கச் செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாரிய யுத்தம் ஒன்றை நடத்துவதற்காக வெளிநாட்டு இராணுவ ஆலோசனைகள் மற்றும் இராணுவ தளபாடங்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையிலும் அரசு தீவிரம்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. ரி

### ★ நாலரை வருடங்களுக்கு முன்

# படையினரால் கைதான கணவரை மீட்டுத்தருமாறு மனைவி கோரிக்கை

## ஜனதிபதி ஆணைக்குழு முன் சாட்சியம்

(மட்டு. நகர்)

மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்து கடமை முடிந்து வீடு திரும்பியபோது எனது கணவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இன்று நாலரை வருடங்களாகியும் இதுவரையும் வீடு திரும்பவில்லை'; என்று வடக்கு கிழக்கில் காணுமல் போனவாகள் தொடர்பாக விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த திருமதி அருள் அன்னதேவி ரகுநாதன் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

# விநோதனை சுட்டுக்கொன்ற இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடினர்!

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் வந்த இரு தமிழ் இளைஞர்களே சட்டத்தரணி சு. விநோதனை சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கொள்ளுப்பிட்டி அலோஸ் அவனியூடாக வந்த இரு இளைஞர்களில் ஒருவர் விநோதன் மீது ஐந்து முறை துப்பாக்கிப்பிரயோகம் செய்தாரென்றும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழி

(4-ம் பக்கம் பார்க்க)

# இழந்த உரிமைகளை பெற்றுக்கொள்ள ஈழப்போரை முன்னெடுப்போம் இளையவன் உரை

(திருநெல்வேலி)

உலகில் பல நாடுகளில் மக்கள் தொழிலால் ஒடுக்கப்பட்டு பசியால் வாடுகிறார்கள். ஆனால் எமது தமிழீழத்தில் சுரண்டல் பசி, பட்டினி இல்லை. ஒரு புதிய இனமாக இங்குள்ள மக்கள் வாழ்வதைக் காண முடிகிறது, நாம் இன்று விடுதலையின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு மேதினத்தன்று நடைபெற்ற பேரணியை தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளையவன் கூறினார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இளையவன் தொடர்ந்து பேசுகையில்:

இன்று தமிழீழத்தில் ஸ்ரீலங்கா இனவாத அரசின் கடல்வலய தடைச்சட்டத்தினால் 56 வீதமான கடற் பொருட்களின் ஏற்றுமதி தடைப்பட்டுள்ளது. எமது கடற்பகுதியில் நாம் நிம்மதியாக உலாவ முடியவில்லை. ஒப்பந்த காலத்தில் கூட தமிழீழ கடற்பகுதியில் வைத்து 40க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 9 லட்சத்து 25ஆயிரம்ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்களை மீனவர்கள்இழந்துள்ளனர். எனவே தேசத்தின் முழு விடுதலையில் தான் எமது தமிழினத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. சர்வதேச சட்டத்தின் படி எமது மக்களுக்கு உரிய உரிமையை கூட நாம் அனுபவிக்க முடியவில்லை. 23,000 சதுர கி. மீற்றர் கடற்பரப்பு தமிழீழத்திற்கு சொந்தமானது. ஆனால் அதில் மீனவர் நிம்மதியாக தொழில் புரிய முடியாத நிலை உள்ளது.

90-91 காலப்பகுதியில் வான் வெளியிலும், கடற்பகுதியிலும் ஸ்ரீலங்கா அரசு தனதுஆதிக்கத்தை வைத்திருந்தது. இரண்டாவது ஈழப் போரின் போது கடற்புலிகள் உருவானது. 3வது ஈழப்போருடன் இன்று விமான எதிர்ப்பு பீரங்கிப் படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதால் எதிரியின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளது,

இதுவரை 21 கடற் கரும்புலிகள் தம்முயிரை இப் போராட்டத்தில் அர்ப்பணித்துள்ளனர். கடல் பிரதேசம் எமது கைக்கு வந்துள்ளது. வான் பிரதேசம் எமது கட்டுப்பாட்டுக்குள் முற்றும் வருமானால் சந்திரிகாவின் அரச படைகள் சரணடையும் அல்லது விலகும்நிலை ஏற்படும் எனவே நாம் ஒருமித்து ஒன்றிணைந்து ஈழம் காண அணி திரள்வோம் என்றார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் பேசும்போது: இன்றைய மே தினமானது அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோவில் அடிமையாக விலங்குடன் வேலை செய்த மக்கள் 8 மணி நேரமாக வேலைசெய்ய இரத்தம் சிந்தி போராடி வெற்றி பெற்ற தினமாகும்

ஆனால் நாம் வேலையோ, ஒய்வு நேர அதிகரிப்போ கேட்டுப் போராடவில்லை. வாழ்வா சாவாஎன்ற நிலையிலேயே கொண்டாடிக்கொண்டிருக்கிறோம்,

இந்நிகழ்வு சிங்கள தேசத்திலும் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. எமது உரிமையை ஒடுக்கியவர்களே இந்நாளை கொண்டாடுகிறார்கள். உண்மையில் உரிமைக்காக போராடும் மக்களே கொண்டாட வேண்டும். ஆனால் பேரினவாத அரசுகள் தமது ஒடுக்கு முறைகளை நியாயப்படுத்த இதை கொண்டாடுகிறார்கள். சமாதானம் எங்கிருந்து வரவேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஒடுக்கப்பட்டவரிடமிருந்து ஒடுககுகிறவர்களிடமிருந்தா என நாம் நோக்கினால் ஒடுக்கு முறையாளரிடமிருந்தே வரவேண்டும் என்பதை அறியவேண்டும்.

கடந்த காலத்தில் இனப் பிரச்சினைக்கு தீர்வாக வைக்கப்பட்ட பண்டா-செல்வா, டட்லி செல்வா ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்ட நிலையில் எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. எமது ஆயுதப் போராட்டம் தான் மக்கள் உணர்வை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டி உள்ளது

காட்டில் வாழும் யானைக்கு கூட சட்ட மூலததில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது அதன் நலன்பேணப்பட்டு வரப்படுகிறது. ஆனால் தமிழீழ மக்கள் மீது அரசு பொருளாதார அடக்கு முறைகளை அமுல்படுத்தி நசுக்கி உரிமைகளை ஒடுக்குகிறது.

ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது யுத்தம் செய்யும் போது தான் வான்படைத் தாக்குதலும், பொருளாதார தடையையும்விதிக்கும், ஆனால் ஸ்ரீலங்கா ஒரு நாட்டின் உள்ளேயே இதை செய்வது மறைமுகமாக இருநாடு என்பதை தெரிவிக்கின்றது

தந்தை 24 மணி நேரத்தினுள் தனிச்சிங்கள சட்டத்தை கொண்டு வந்தார் தாயார் கல்விமீது தரப்படுத்தலை கொண்டு வந்தார். ஆனால் மகள் இன்று பொருளாதார தடை போட்டு பட்டினியை ஏற்படுத்தி விட்டார். எனவே போராட்டத்தில் பங்காளிகளாக இருக்கும் எல்லோரும் போராளிகளாக மாறவேண்டும் என்றார். -157-சி

## ஏறாவூரில் தேடுதல் வேட்டை இளைஞர் சுட்டுக் கொலை

(மட்டு நகர்)

ஏறாவூர் படையினர் நடத்திய தேடுதல்வேட்டையின் போது தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஐந்துபேர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 8-30 மணிவரை இத்தேடுதல் வேட்டை நடைபெற்றது. (ரி)

## லொறிக் கூரையில் பயணம்; மரக்கொப்பில் சிக்கி காயம்

(நெல்லியடி)

இரவுவேளை லொறியின் கூரையில் இருந்து பயணம் செய்தவர் வீதியில் நின்ற ஆலங்கொப்பினால் அடியுண்டு காயமடைந்தநிலையில் மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 9-30 மணியளவில் மூத்தவிநாயகர் கோவிலடியில் நிகழ்ந்துள்ளது.

மேதினக்கூட்டத்தில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியரான க. திரவியநாதன் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவர். (160)

## 6நாள் கம்பன் விழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 15ம் ஆண்டு நிறைவுக் 'கம்பன்விழா' நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகிறது.

கம்பன் உருவப்பட ஊர்வலம், ஆசியுரை, வரவேற்புரையைத தொடர்ந்து பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையுரை நிகழ்த்துவார். வாழ்த்துரையை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்துவார். இதைத் தொடர்ந்து மூதறிஞர் கௌரவிப்பும், இவ்வாண்டுக்கான 'மகர யாழ் விருது' வழங்கலும் நடைபெறும். வைத்தியகலாநிதி து.வி. ஜெயக்குலராஜாவுக்கு பேராசிரியர் க. குணரத்தினம் இவ்விருதினை வழங்குவார்.

இதையடுத்து 'கம்பன்' நூல் வெளியீடு நடைபெறும் இவ் வெளியீட்டுரையை பலாலிஆசிரியபயிற்சிக்கலாசாலைமுன்னாள் அதிபர் ஆர். எஸ் நடராஜா நிகழ்த்துவார். சிறப்புரையை யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் நிகழ்த்துவார்.

இதையடுத்து இறுதி நிகழ்வாக மானிப்பாய் 'கலைக்கோயில் மாணவிகளின் 'ஆடல் வேள்வி' கலைநிகழ்ச்சி நடைபெறும். (சி)

## 80 குடும்பங்களுக்கு இலவச திருமணப் பதிவு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு சன சமூக நிலையங்களின் சமாஜத்தினால் புன்னாலைக்கட்டுவன் தெற்கிலுள்ள மத்தாளோடைக் கிராமத்தில் கலைவாணி சனசமூகநிலையத்தை உள்ளடக்கிய கிராமத்தில் இதுவரை காலமும் சட்டபூர்வமாக திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாது குடும்பவாழ்க்கை நடத்தி வந்த எண்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களின் சட்டபூர்வத் திருமணப்பதிவு இலவசமாக அண்மையில் செய்துவைக்கப்பட்டது.

மேறபடி குடும்பங்களுக்கான இலவசத் திருமணப் பதிவுகளை வலிகாமம் வடக்கு விவாகப் பதிவாளர் திரு. செ. அன்னலிங்கம் பதிவுசெய்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேசசபை செயலாளர் திரு. தி. கணேஸ்வரசர்மா கலந்துகொண்டார். (109-ரி)

## இடமாற்றம்

(நெல்லியடி)

கரவெட்டி தபால் நிலையத்தில் சுமார் மூன்று வருட காலமாக தபாலதிபராகப் பணியாற்றிவந்த திரு.க. சிவராசசிங்கம் கடந்த மாதம் தொடக்கம் சாவகச்சேரி தபாலகத்திற்கு பொறுப்பு வாய்ந்த தபாலதிபராக இடமாற்றலாகியுள்ளார். 160

## யுத்த நடவடிக்கைகள் சமாதானத்தை பாதிக்காது

(கொழும்பு)

தற்போதைய யுத்த முயற்சிகள் அரசாங்கத்தின் சமாதான முயற்சியை குலைத்து விடமாட்டாது என நீதி மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் முனனெடுக்கப்படும் அதே வேளையில அரசாங்கத்தின் சமாதானமுயற்சிகளுக்கு அபரிமிதமான சர்வதேச ஆதரவு காணப்படுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் எடுத்த சமாதான முயற்சிகளுக்கு பிரான்ஸ் அரசாஙகம் பாராட்டுத் தெரிவித்துள்ளதாகவும் பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் நடைபெற்றபோது அக்கூட்டத்தில் ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதிகளும் இலங்கை ஜனாதிபக்கு பாராட்டுத் தெரிவித்தாகவும் குறிப்பிட்டார். (க-ரி)

## கடல் வலயத் தடையினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் அரச அதிபருக்கு மகஜர்

[வடமராட்சி)

கடல் தடைச்சட்டம் கடந்த எட்டுமாதங்களாக அமுலில் இருந்த போது மீனவர்களுக்கான உலர் உணவு விசேட அட்டை மூலம் வழங்கப்பட்டு வந்தது பின்பு தடை நீக்கப்பட்டு நிவாரணமும் நிறுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் கடல் வலயச்சட்டம் போடப்பட்டிருப்பதுடன் மீனவர் கடலில் கால் வைக்கமுடியாத அளவிற்கு கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியும் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

மேற்படி காரணங்களையும் தமது சீவியக் கஷ்டங்களையும் சுட்டிக்காட்டி வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்சங்கங்களுக்கு ஊடாக யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். 51 ரி

## நாலரை வருடங்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

மட்டக்களப்பு வில்லியம் ஒல்ட் மண்டபத்தில் ஜனாதிபதி ஆணைக்குழு தலைவர் கே. பாலகிட்ணர் தலைமையிலான குழு முன்னிலையில் இவ்விசாரணை நடத்தப்பட்டது.

இவ் விசாரணையின் போது சாட்சிமேலும் தெரிவித்துள்ளதாவது: எனது கணவர் டாக்டர்கே ரகுநாதன் ]வயது 48[ மட்டக்களப்பு வைத்தியசாலையில் பணியாற்றிவந்தார். நண்பகல் 12-00மணிக்குமதிய உணவுக்காக அவர் வீடுவருவது வழக்கம் 25-10-90 அன்று மாலை 3 மணியாகியும் அவர் வீடுதிரும்பவில்லை. அதிகவேலை காரணமாக அவர்வீடு வரவில்லை என்றுநான்நினைத்தேன் எனது தம்பி வைத்தியசாலைக்குச்சென்று விசாரித்த போது 12 மணிக்கே வீடு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அன்றைய சூழ்நிலையில் ஆட்கள் திடீரெனக கைது செய்யப் படுவது வழக்கமாக விருந்தது கடமை முடிந்து வரும் போது சிறைச்சாலைஇராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் எனது கணவரை கைது செய்ததாக சிலர் தெரிவித்தனர்.

மூன்றும் நாள் அந்த முகாம் பொறுப்பதிகாரியாக விருந்த முனஸ் என்பவரைச் சந்தித்தேன். அவர் எனது கணவரைத் தாம் கைது செய்யவில்லை எனவும் வேறு முகாம்களில் சென்றுவிசாரிக்குமாறும் கூறினார். பல இடங்களில் நாம தேடிப் பார்த்தோம். இதுவரை அவர் பற்றிய எவ்வித தகவலும் இல்லை

எனது கணவர் இவ்வாறு கைது செய்யப்படுவதற்கு பல தடவைகள் முன்னரும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். எனவே எனது கணவரை மீட்டுத்தருமாறு உருக்கமாக கேட்டுக்கொள்ளுகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## விஜேதனை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் விஜேதன் இறந்தாரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்

காலஞ்சென்ற விஜேதனைச்சந்திப்பதற்காக வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இரு இளைஞர்கள் சென்றுள்ளனர். அப்போது அவர் வீட்டுக்குள் குளியலறையில் இருந்துள்ளார். இதனால் திரும்பிச் சென்ற இரு இளைஞர்களும் காலை 9-30 மணிககு மீண்டும் வந்து அவரைச் சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு இளைஞர்களில் ஒருவர் நீலநிறக காற்சட்டையும் வெள்ளைநிறச் சேட்டும் அணிந்திருந்தனர் எனக கூறப்படுகிறது

துப்பாக்கிப்பிரயோகம்செய்த இவர்கள் இருவரும் அலோய் அவனியூவில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறித்தப்பிச் சென்றுள்ளனர்.

இரண்டாவது முறை அந்த இரு இளைஞர்களும் வீட்டுக்கு வந்தபோது விஜேதன் பத்திரிகை வாசிததுக்கொண்டிருந்தார்.

வநத இருவரில் ஒருவர் விஜேதனுடன் ஏதோ ஒரு விடயமாக பேசவேண்டுமென்று கூறி அறைக்குள் சென்று பேசியுள்ளனர். இந்தப் பேச்சுக்களின்போது வாக்குவாதம் ஏற்பட்டு இருவரும் சத்தம் போட்டு பேசியுள்ளனர். வாக்குவாதம் முற்றவே குறிப்பிட்ட இளைஞர் விஜேதனின் காலில் முதலில் சுட்டார். பின்பு தொடர்ந்து மார்பிலும் உடலிலும் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து விட்டு இளைஞர்கள் தப்பியோடிவிட்டனா.

தகவல் கிடைத்ததும் ஸ்தத்துக்கு விரைந்த கொள்ளுப்பிட்டி பொலிஸார் தடைகளைப்போட்டு தேடுதல் நடத்தினர்.

அலோய் அவனியூவில் சந்தேகத்திற்கிடமான இளைஞர் ஒருவரை கைது செய்தனர்.

விஜேதன் கடந்த 9ம் திகதி இந்தியாவிலிருந்து திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ரி

## கடற்படை தாக்குதல்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுக் கடலில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா கடற்படையினர் நடாத்திய பீரங்கித் தாக்குதலால், மீனவர்கள் உடமைகளை கைவிட்டு' கடலில் குதித்து கரை சேர்ந்தனர். இச் சம்பவம் நேற்று முன் தினம் காலை 6-45 மணியளவில் இடம் பெற்றது 160-ரி

## கூட்டுறவு ஆணையாளர் டிவகலாலா யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திரு. சுந்தரம்டிவகலாலா வடபகுதிக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

திரு. சு. டிவகலாலா யாழ். கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகளையும் கூட்டுறவுத்துறை உயர் அதிகாரிகளையும், கூட்டுறவாளர்களையும் நிர்வாகிகளையும் சந்தித்து சமகாலப் பிரச்னைகள் பற்றி கலந்துரையாடவுள்ளார்,

அவர் தனது யாழ். விஜயத்தை முடித்துக்கொண்டு கிளிநொச்சி, மன்னார். முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சுமார் ஒன்றரைமாதகாலம் வடபகுதியில் தங்கியிருந்து கூட்டுறவாளர்கள், கல்வியாளர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் சம்பந்தமாக ஆராய்வதுடன் யாழ். அரச அதிபரையும் சந்திக்கவுள்ளார். 59-வா-ரி

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் 6-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடத்தும் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் எதிர் வரும் யூன் மாதம் 6ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. சென்ற வருடம் கோட்டமட்டத்தில் நடைபெற்ற இம்மாணவர் எழுச்சி நாள் இவ்வருடம் மாவட்டரீதியாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் திரு. இன்பன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: யூன் மாதம் 6ம் திகதி நடைபெற இருக்கும் தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு இது பற்றிய ஏற்பாடுகள் பற்றி சகல பாடசாலை அதிபர்களுக்கும் மாணவர் தலைவர்களுக்குமான கலந்துயையாடல் பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது. சகல பாடசாலை அதிபர்களும், மாணவர் தலைவர்களும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கோட்டரீதியாகக் கலந்துரையாடல் நடைபெறும் திகதிகளும் இடங்களும் வருமாறு; கரவெட்டிக் கோட்டம் இமமாதம் 6-ம் திகதி காலை 9-00 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியிலும், பருத்தித்துறைக் கோட்டம் இம் மாதம் 6ம் திகதி காலை 11-00 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், மருதங்கேணி கோட்டம் அன்று பிற்பகல் 3 மணிக்கு நாகர்கோவில் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

யாழ்ப்பாணம். நல்லூர் கோட்டங்கள் இம்மாதம் 7ம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும், கோப்பாய் அன்று காலை 11-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், சக்காளை அன்று பிற்பகல் 1-00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், உடுவில், தெல்லிப்பளை மருதனார்மடம், சண்டிலிப்பாய் கோட்டங்கள் அன்று பிற்பகல் 3-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும்.

வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்கள் இம்மாதம் 8ம் திகதி பிற்பகல் 1-00 மணிக்கு சென்ஜேம்ஸ் அக்கடமியிலும் பளை கோட்டம் இம்மாதம் 9ம் திகதி காலை 9-00 மணிக்கு பளை மகாவித்தியாலத்திலும் சாவகச்சேரி கோட்டம் அன்று பிற்பகல் 1-00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் தலைவர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணக் கோட்டம் இம்மாதம் 8ம் திகதி காலை 9-00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் நல்லூர் கோட்டம் அன்று காலை 11-00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் நடைபெறும்

[162-சி[

## முட்டை விலையேற்றம்

(அரியாலை

கடந்த வாரம் 5-00 ரூபாவாக விற்கப்பட்ட முட்டை ஒன்று தற்போது 8-00 ரூபாவாக அதிகரித்துள்ளது -59

## அதிபர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியழன் பி. ப. 2 30 மணிக்கு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த துரைசிங்கம் தலைமையில் கோட்டப் பணிமனையில் நடைபெறும்.

## பாரிய யுத்தத்தை அரசால் தாங்கமுடியாது

(கொழும்பு)

பாரிய யுத்தத்தை தற்போதைக்குஅரசால் தாங்க முடியாது என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசு புலிகளோடு மீண்டும் பேச விரும்புகிறது. எனினும் இனிப்புலிகளை ஆறு மாதத்தின் முன்னர் நம்பியது போல கணிப்பிட்டது போல நம்பாது என்பது மட்டும் உண்மை

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எப்போதுமே அரசை நம்பவில்லை. தற்போது சமாதானம் புலிகளை விட அரசக்கே அதிக தேவையாக இருக்கிறது.

தனது அரசின் சமாதான தோற்றப்பாடு பறிபோவதை அரசு விரும்பவில்லை. எனவே தான் தாக்குதல் தொடரும் போது கூட புலிகள் விரும்பினல் பேசலாம் என்று அரசு அறிவித்துக்கொண்டிருக்கிறது -ரி

## வெளியூர்க் கடிதங்கள் யாழ். வருவதில் தடங்கல்

(பண்டத்தரிப்பு)

கொழும்புக் கடிதங்களும், வெளிநாட்டுக் கடிதங்களும் கடந்த ஒருமாதகாலமாக யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவில்லை என்று அறியப்படுகின்றது.

வெளிநாட்டுக் கடிதங்கள் படையினரால் கொழும்பில் வைத்து மீண்டும் உடைத்து பரிசோதிக்கப்படுவதாகவும் தெரிவருகின்றது.

வெளிநாடுகளிலுள்ள தங்கள் பிள்ளைகள், உறவினர்களின் கடிதங்கள் நீண்ட நாட்களாக இங்கு வந்து சேராததினால் பலரும் கவலையடைந்துள்ளனர். 72


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

### விஞ்ஞான பீடம்

1994/95 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் முதலாம் ஆண்டு கற்கை நெறிக்கு அனுமதிக்கப்பட்ட எல்லா பௌதீக விஞ்ஞான, உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கும் முந்திய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டுத் தமது மேற்படி கல்வியை 1994/95 கல்வியாண்டில் ஆரம்பிப்பதற்குப் பின்போட அனுமதி வழங்கப்பட்ட எல்லா மாணவர்களுக்கும் கணணி விஞ்ஞானத்திலும் ஆங்கிலத்திலும் அடிப்படைக் கற்கை நெறியொன்று 1995 மே 9ம் தேதி தொடக்கம் நடாத்தப்படும்.

மேற்குறிப்பிட்ட மாணவர் யாவரும் விஞ்ஞான பீடத்திலுள்ள "P 1" விரிவுரை மண்டபத்தில் 1995-05-09ம் தேதி முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறவுள்ள அடிப்படைக் கற்கைநெறி வகுப்புக்கு வருகை தருமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். முதலாம் ஆண்டில் கணணி விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்பதற்கு அனுமதிக்கப்படவுள்ள மாணவர்கள் அடிப்படைக்கற்கை நெறியின் இறுதியில் நடாத்தப்படவுள்ள அறிமுக கணணி விஞ்ஞானத் தேர்வில் அவர்கள் காட்டும் தேர்ச்சியின் அடிப்படையில் மாத்திரம் தெரிவு செய்யப்படுவர்.

பதிவாளர்
(எ- 4909)


## சிமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சிமேந்து தொழிற்சாலை ஊழியர்களின் சித்திரை மாதத்திற்கான சம்பளம் இன்றும் நாளையும் யாழ்ப்பாண வர்த்தக வங்கியில் காலை 9மணிமுதல் 12 மணிவரை வழங்கப்படும் என்று சிமெந்துக் கூட்டுத்தாபன கணக்காளர் திரு. கே. மகேஸ்வரன் அறிவித்துள்ளார். ரி

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

நரோமா கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம்மாதத்திற்குரிய (மே) ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ் செயலக ஓய்வூதியப்பிரிவுக்குநேற்று 3ம் திகதி வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை உரியவர்களுக்கு அனுப்பிவைக்கும் பணியில் ஒய்வூதியப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (71-சி(

## பல்தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறி

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப்பிரிவினரால் இவ்வருடம் பல தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிகள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இவ்வருடம் நடைமுறைப் படுத்தப்படும் பயிற்சிகள்-பாடசாலை-கோட்டம் ஆகியவற்றின் விபரம் வருமாறு:

சங்கானைக் கோட்டம்:

ஆங்கில தட்டெழுத்து-சுருக்கெழுத்து- விக்ரோறியாக் கல்லூரி உடை அமைத்தல்-வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி,

சண்டிலிப்பாய்க் கோட்டம்:

ஆங்கில தட்டெழுத்து-சுருக்கெழுத்து, மோட்டார் றீவைண்டிங்-மானிப்பாய் இந்துக் கல்லூரி.

தெல்லிப்பழைக் கோட்டம்:

உடை அமைத்தல், ஆங்கில தட்டெழுத்து-சுருக்கெழுத்து-மல்லாகம் மகாவித்தியாலயம்.

உடுவில் கல்விக்கோட்டம்:

ஹோட்டல் றேட்ஸ், விவசாய விஞ்ஞானம்-இராமநாதன் கல்லூரி, உடை அமைத்தல்-இணுவில் இந்துக் கல்லூரி. மோட்டார் கார் திருத்துதல்-மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

கோப்பாய் கல்விக்கோட்டம்;

வானொலி திருத்துதல்-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிதமிழ் தட்டெழுத்து-சுருக்கெழுத்து, பனம்பொருள் கைப்பணி-புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி. ஹோட்டல் றேட்ஸ், உடை அமைத்தல்-அச்சுவேலி புனித திரேசா ம. வி.

கரவெட்டிக்கோட்டம்:

உடை அமைத்தல், மரத்தளபாட உற்பத்தி, ஆங்கில தட்டெழுத்துச்சுருக்கெழுத்து-கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி.

பருத்தித்துறைக்கோட்டம்:

உடை அமைத்தல், தமிழ் தட்டெழுத்து- சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து- மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வானொலிதிருத்தல்-வேலாயுதம் ம. வி.

மருதங்கேணிக் கோட்டம்;

படகு இயந்திரம் திருத்தல்-மருதங்கேணி அ. த. க. பாடசாலை. (109)

## தேர் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

கடநத 1993ம் ஆண்டில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கடும் ஷெல் தாககுதல்களினல் பலத்த சேதமடைந்த சுழிபுரம் பறுளாய் முருகமூர்த்தி ஆலயத்தின் சித்திரத் தேரை சுமார் 4 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. -72


## ஓராண்டு நினைவு நாள்



தோற்றம்:
18-09-1957

★

மறைவு:
15-04-1994

★

திதி:
04-05-1995

அமரர் இராமநாதி விஸ்வலிங்கம்

[சின்னராசா]

[4-ம் வட்டாரம் - புங்குடுதீவு]

அன்பும் பண்பும் அறிவுடன் வாழ்ந்து
பாசமுடனே எல்லோர் மனமும் இன்பமுற
நீ - எம் பிள்ளை என்றே நினைக்க
சொல்லாமல் போனய் எங்கள் தலைவா
எப்போ காண்போம இப்புவி தனிலே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கிறேம் பிட்டியம்பதியாள்
காளி அன்னை தனையே

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்.

க. வசந்தகுமார்
[ராதா இல்லம்]
121, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 1471]

# அகதிகளுக்குவந்த உணவுப்பொருள் கடற்படையினரால் அபகரிப்பு

[கொழும்பு]

யாழ். மாவட்ட அகதிகளுக்கு கப்பலில் வந்த பெருமளவு உணவுப் பொருட்களை கடற்படையினர் அபகரித்துள்ளனர்.

திருமலையிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்து கொண்டிருந்த இந்தக் கப்பலை நடுக்கடலில்வைத்து வழிமறித்த கடற்படையினர் அதனை ஊர்காவற்றுறைக்கு கொண்டு சென்று அதிலிருந்த அனைத்து உணவுப் பொருட்களையும் இறக்கிவிட்டனர்.

கடந்த 30ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தடைய வேண்டிய இக்கப்பல் கடற்படையினரின் இந்த தலையீட்டால் பருத்தித்துறைக்கு வரவில்லை. இதனுல் தமிழ் அகதிகளுக்கான உணவுப் பொருட்களும் கிடைக்கவில்லை.

இதேவேளை வடபகுதி நோக்கி வந்த மூன்று உணவுக்கப்பல்கள் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்ததும் தெரிந்ததே. சி

வடமராட்சி, தென்மராட்சி

# வாகன அனுமதிப்பத்திர பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி. தென்மராட்சி பகுதியில் வாகன அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் முதலுதவி. வீதி போக்குவரத்து பற்றிய பயிற்சி வகுப்புகளுக்கு கீழ்தரப்படும் திகதிகளில் குறிப்பிட்ட இடத்திற்கு சமூகம் தரும்படி வேண்டப்படுன்றனர்.

வடமராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 6ம், 7ம். 13ம்,20ம் திகதிகளில நெல்லியடி மகாவித்திராலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை நடைபெறும்,

தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 14ம், 21ம், 27ம், 28ம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசுமகாவித்தியாலயத்தில் மாலை 3-0υ மணி தொடக்கம் 5-00 மணிவரை நடைபெறும்.

வாகன அனுமதிப்பத்திரம் பெற விரும்பும் ஏனையோரும் வகுப்புகளில் பங்குபற்ற முடியும். சி

# வெளிநாட்டு ராணுவ உதவியுடன் தமிழரை அடிமைப்படுத்த முடியாது

(கொழும்பு)

வெளிநாட்டு இராணுவ உதவியுடன் தமிழ் மக்களை அடிமைப்படுத்த முடியாது. அப்படி அரசு அடிமைப்படுத்த முயன்ருல் மிக மோசமான விளைவுகள் நாட்டில் ஏற்படும்.

இவ்வாறு வவுனியாவில் நடைபெற்ற மேதினக் கூட்டமொன்றில் உரையாற்றிய பலரும் தெரிவித்துள்ளனர். அவர்கள் இதுபற்றி மேலும் கூறுகையில்;

உண்மையான, நேர்மையான விதத்தில் தமிழ் மக்களின் பிரச்னை அணுகப்பட வேண்டும். இதை விடுத்து போர் நடவடிக்கைக்காக வெளிநாட்டு இராணுவ உதவியுடன் தமிழ் மக்களை அடக்கி அவர்களின் உரிமைகளைப் பறிக்க அரசு முயன்ருல் நிச்சயமாக சமதர்ம தமிழீழம் பிறப்பதற்கான நிலைப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் முற்றுமுழுதாக ஏற்படும்.

அரசு தமிழரின் பிரச்னையை சரியான முறையில் அணுக வேண்டும். இதன்மூலமே இந்த நாட்டில் மேலும் இரத்தக்களரி ஏற்படுவதை தடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -சி

# அமைச்சர் பீரிஸின் நியூஸிலாந்து பயணம் ரத்து

(கொழும்பு)

நீதி மற்றும் அரசியல் விவகாரத்துறை அமைச்சர் ஜி. எல். பீரீஸ் ஏற்கனவே திட்டமிட்டிருந்த தமது நியூஸிலாந்துப் பயணத்தை ரத்து செய்துவிட்டு புதுடில்லியில் இருந்து திருமதி சந்திரிகாவுடன் கொழும்பு திரும்பியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தமது தாக்குதலை ஆரம்பித்தபின் நாட்டில் பதற்றநிலை தோன்றியிருப்பதனுல் ஜனுதிபதி, பிரதமர் அமைச்சர்கள் தங்கள் வெளிநாட்டுப் பயணங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோள் பல துறைகளிலும் ஒலித்தமை இங்கு நினைவு கூரத்தக்கது. -கே-சி

# தமிழ் போராளிகள் வளர்சிபெற ஜே. ஆர்., பிரேமா உதவியுள்ளனர்

## - சந்திரிகா குற்றச்சாட்டு

(சென்னை)

இராணுவத்திற்கு துரோகமிழைத்து தமிழீழ போராளி அமைப்புகள் வளர்ச்சிபெற முன்னுள் ஜனுதிபதிகளான திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனுவும், திரு. பிரேமதாசாவும் உதவி வழங்கியுள்ளதாக ஜனுதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியுள்ளார்.

'இந்தியா ருடே'க்கு வழங்கிய பேட்டியில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:

பாரிய அளவிலான யுத்தமொன்றிற்கு அரசு மீண்டும் செல்லமாட்டாது. நாம் அப்படிப் பெரியதொருயுத்தத்தை நடாத்த விரும்பியிருந்தாலும் அதற்கான போதிய வசதி எம்மிடம் இல்லை. புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றவேண்டும்.

அரசு போர் நடாத்துவதென தீர்மானித்தால் அதிலிருந்து சிறிதளவும் பின்வாங்காது. யுத்தத்தை நடாத்தியே தீரும். தற்போது புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு பதில தாக்குதலை நடாத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இப்பிரச்னைக்கு ஆரம்பத்திலேயே தீர்வு கண்டிருக்கவேண்டும், அதனைவிடுத்து முன்னுள் ஜனுதிபதிகளான திரு. ஜெயவர்த்தனுவும், திரு. பிரேமதாசாவும் தமிழ்போராளிகளை வளர்த்துவிட்டனர் எனவும் கூறியுள்ளார். (சி)

# கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் வட்டத்திற்குட்பட்ட சனசமூக நலநோம்பு மூலவள நிலையங்களின் (சனசமூக நிலையங்களின்] பிரதிநிதிகளுக்கான மிகமுக்கியமானதும் அவசரமானதுமான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் மேற்படி நிலையங்கள் ஒவ்வொன்றினதும் தலைவர். செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தவருது கலந்து கொள்ளும்படி நிர்வாக சேவைப் பொறுப்பாளர் வேண்டிக்கொள்கிருர்.

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பட்ட நிலையில் போடப்பட்டிருந்ததால் இவர்கள் படையினரால் அல்லது தமிழ் இயக்கங்களினுல் சுட்டுக்கொல்லப்பட்டிருக்க வேண்டுமென தாங்கள் கருதுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து வவுனியாவில் பெரும் பதற்றம் நிலவுகிறது. மாலை நேரத்தின் பின், குறிப்பாக தமிழ் மக்கள் வெளியே நடமாட தயக்கம் காட்டுகின்றனர். இதேநேரம் வவனியாவின் பல பகுதிகளிலும் பெருமளவு படையினர் கனரக வாகனங்கள் சகிதம் குவிக்கப்பட்டு வருகிருர்களாம். -சி

# தமிழக சட்டசபையில் பெரும் கைகலப்பு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையே நேற்று கைகலப்பு, மோதல்கள் ஏற்பட்டதில் சபையில் கூச்சல் குழப்பம் நிலவின. ஆத்திரமுற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் மைக்குகளை உடைத்துச் சேதபாக்கினர், இதனையடுத்து அவர்கள் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தொடர்பாக சில முரணுன கருத்துக்களை தமிழகமுதலவர் செலவி ஜெயலலிதா சபையில் தெரிவிக்க முற்பட்ட போது இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பலத்த ஆர்ப்பாட்டம் செய்ததுடன் கூச்சலிட்டனராம். அப்போது பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இதனையடுத்து இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஞானசேகரமும், அ. தி. மு, க. உறுப்பினர் சுரேசும் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக்கொண்டனர்.

சபையில் ஏற்பட்ட களேபரத்தையடுத்து காங்கிரஸ் உறுப்பினர் ரங்கராஜன் உட்படபலர் வெளியேற்றப்பட்டனர்.

பிரதமர் ராவ், ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி, தமிழக ஆளுநர் சென்னுரெட்டி ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டதனுல் பிரச்னை எழுப்பப்பட்டதாகவும் ஆனுல் பிரதமர் ராவின் கொடும்பாவி எரிக்கப்படவில்லையென முதல்வர் ஜெயலலிதா தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. -க-சி

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் முக்கிய பாதைகள் அடைக்கப்பட்டு அந்தவழியாலான போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அவசர அவசரமாக இராணுவத்துக்கு புதிதாக ஆட்களை சேர்க்கும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது என்றும் எல்மோ பெர்ணுண்டோ மேலும் கூறியுள்ளார். -ம-சி

## ரோந்துப்படையணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிய புலிகள் அவற்றை பிறிதொரு இடத்தில் போட்டனர்.

இதேவேளை கடந்த திங்களன்று மட்டக்களப்பு ஏருவூர் ஐயங்கேணியில் பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கைக்குண்டு தாக்குதலில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் படுகாயமடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-சி)

யாழ்நகரில்

# சாப்பாட்டு கடையை மின்னல் தாக்கியது

(ஆனைப்பந்தி)

யாழ். நகர்ப் பகுதியில் உள்ள சாப்பாட்டுக் கடை ஒன்றில் மின்னல் தாக்கியதில் கடையிலிருந்த பொருட்கள் பெருமளவு சேதமடைந்தன.

நேற்று நண்பகல் 11-50 மணியளவில் கே. கே. எஸ். வீதியிலுள்ள மண்கும்பானைச் சேர்ந்த குணம் என்பவருடைய கடையிலேயே மின்னல் தாக்கியது. இதனுல் கடையில் இருந்த அலுமாரிகளின் (சோக்கேஸ்) [கண்ணுடிகள் நொருங்கின. மீற்றர் பெட்டி உட்பட மின்சார உபகரணங்கள் அனைத்தும் உடைந்து நாசமாயின. தெய்வாதீனமாக கடையிலிருந்த எவருக்கும் காயமேதும் ஏற்படவில்லை,

கடையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோரும் வேலையாட்களும் இடி விழுந்த சத்தத்தைக் கேட்டு 'ஷெல்' தான் விழுந்துவிட்டது என நினைத்துக் கீழே விழுந்து படுத்துவிட்டதாகவும், சிலர் சாப்பாட்டையும் அரைகுறையாக உண்ட பாதியுடன் விட்டுவிட்டு அலறியடித்துக் கொண்டு வெளியில் ஓடிவிட்டதாகவும் தெரிவிககப்பட்டது. 101-சி

## இன்று ஹர்த்தால்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தமிழகத்தில் பல்லாயிரம் பேர் கைதாகி இருப்பதாக திரு. வை. கோபாலசாமியும் கூறியுள்ளார்.

இதேவேளை இன்றைய ஹர்த்தாலில் குழப்பம் ஏற்படாமல் இருக்க காவல்துறையினர் பல பாகங்களிலும் உசார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அரசுக்குறிப்பு தெரிவிக்கின்றது. -கே-சி

## இரு பௌத்த

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சமய வழிபாட்டைக் கைக்கொண்டிருக்கும் இந்தப் பௌத்த பிக்குகள் முதல் முதலாக இராணுவத்தில் சேர்ந்திருப்பதற்கு இலங்கை இராணுவம் தமது படையில் 10 ஆயிரம் பேரை நிரப்ப ஆள் தேவையென விண்ணப்பித்ததன் விளைவே என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். -கே-சி

## விமானப்படைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கபடுகின்றன என்ருர். இதேவேளை இரு அவ்ரோக்கள் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து விமானப் படை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு அதன் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து மீள்பரிசிலனைகள் செய்யப்பட்டு வருதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே யுத்த விமானக் கொள்வனவிற்காக விமானப் படை உயர்மட்ட குழுக்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -ம-சி

## சந்திரிகா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினுர்.

சார்க் உச்சி மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்ச்சியில் ஜனுதிபதி சந்திரிகாஉரையாற்றியுள்ளார்.

சார்க் மாநாடு இன்றும் நாளையும் நடைபெறும். இதில் ஏனைய நாட்டு தலைவர்கள் கலந்து கொள்கிருர்கள்.

சார்க் உச்சி மாநாட்டில் ஒருநாள் மாத்திரம் கலந்து கொண்டபின் நாடு திரும்பிய ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்கா, தான் பாதுகாப்பு படையினரதும் பத்திரிகையாளரதும் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளும்முகமாகவே அவசரமாக நாடு திரும்புவதாக புதுடில்லியில் தெரிவித்திருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில பலியான 2 பாதுகாப்பு படையினரதும் 3 பத்திரிகையாளரதும் அஸ்தி நேற்று கொழும்பில் அவர்களது உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது அந்த உறவினர்களுக்கு திருமதி சந்திரிகா நாடு திரும்பியதும் ஆறுதல் கூறியிருந்தார். சே-வி-சி

இப்பத்ரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Ne: ws pa er at the General Post office Sri Lanka under Licence number B 1633613.